## பள்ளிக் கல்வித்துறை - விழுப்புரம் மாவட்டம்
## அரையாண்டுப் பொதுத்தேர்வு – டிசம்பர் 2018
## பொதுத்தமிழ் – விடைக்குறிப்பு

**வகுப்பு –12** **மதிப்பெண் – 90**

**I. பலவுள் தெரிக.** **6 X 1 = 6**

அ)

1. ஆ) (ii) (iii) (iv) (i)
2. ஈ) தினைத்துணை நன்றி செயினும் பனைத் துணையாக் கொள்வர் பயன்தெரிவார்
3. இ) கண்ணகி
4. அ) கீட்ஸ்
5. ஆ) மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர்
6. ஆ) சோழர் காலம்.

ஆ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 8x1=8

7. இ) உள்ளுறை உவமை
8. இ) வண்ணதாசன்
9. ஆ) தீக்குச்சி
10. ஆ) அவரைப்பொட்டு
11. இ) ஐயாறப்பர்
12. ஆ) அடுக்குத்தொடர்
13. அ) ஒவ்வொரு கல்லாய் – த.நா. சேனாபதி
14. இ) மாற்றிப் பேசுபவர்

**II .அ) குறுவினா** **3 X 2 = 6**

15. கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் வெள்ளிவிழாவின் போது ஞானியாரடிகள் தலைமையில் தமிழரசி குறவஞ்சிநூல் அரங்கேற்றம் செய்யப்பட்டது.
16. சீதக்காதி நொண்டி நாடகம், முதுமொழிமாலை
17. I. வஞ்சி நகரம் சோழர்களால் தகர்க்கப்பட்டபோது சேரர்கள் திறையாகக் கொடுத்த கடம்ப மரத்தால் ஆனது.

    II.போரில் தோற்ற பகையரசர் தலையில் மண் சுமக்கச் செய்து காவிரிக்கு அணை கட்டுமாறு செய்தது.
18. பெரிய ஆண் யானையின் தந்தம்போல் தாழை அரும்பு உள்ளது.

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 X 2 = 4**

19. கவிதை ஒரு கலை. கலை என்று கூறிய அளவில், இன்பம் விளைத்தலே அதன் தலையாய நோக்கம் என்பது வையாபுரிப்பிள்ளை கருத்தாகும்.

20. 1. நீதிநூல்களில் இலக்கிய நயம் மிக்குக் காணப்படுவது இயல்பன்று.

2. நீதிகளைக் கூற எழுந்தவை நீதி நூல்கள்.

3. இவ்வாறு நடக்க வேண்டும் என்று விதித்தும் இவ்வாறு நடக்கக் கூடாது என்று விலக்கியும் செல்வது நீதி நூல்களின் இயல்பாகும்.

21. முடியும் கோலும் உடைய மன்னனைத் தெய்வமாக மக்கள் அனைவரும் போற்றி அடிய பணிய வேண்டும் என்ற மூட நம்பிக்கையே முதல் தடுமாற்ற நிலையாகும்.

**இ) எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7 X 2 = 14**

22. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

அ) அறிவு**க்**குறைவு, கவன**க்**குறைவு, திறமை**க்**குறைவு ஆகியவற்றால் விபத்துகள் உண்டாகின்றன.

ஆ) உணவு**ப்** பொருள் தர**க்** குறைவாக விற்கப்படுவதால் நச்சு**க்** காளான் உண்டாகி**ச்** செரிமானம் குறைகிறது.

23. தொடரிலுள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

அ) இடப் பக்கம் இருப்பது காந்தி சிலை அன்று

ஆ) இதனைச் செய்தவர் இவர் அல்லர்.

24. கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக.

அ) விடியற்காலையிலேயே வெற்றிலை போடுவது ஒரு பழக்கமா?

ஆ) மழைக்குக் குடை பிடித்தான்

25. பிறமொழிச் சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்களை எழுதுக.

அ) வெற்றியாளன் / வாகைசூடி ஆ) தேவைக்கு மிக அதிகம்

இ) திருவாளர் ஈ) முகப்பு மாடம்

26. மரபு பிழைகளை நீக்கி எழுதுக

அ) யானை பிளிறியதால் மான் கன்றுகள் ஓடின.

ஆ) பலா மூசையும் மாவடுவையும் என் அம்மா கொண்டு வந்தார்கள்.

27. அண்ணம் - மேல்வாய்

அன்னம் - பறவை

28. புணர்ச்சி விதி கூறுக.

அ) சேவடி – செம்மை + அடி

1. ஈறுபோதல் – மை
2. ஆதிநீடல் - செ →சே
3. இனையவும் - ம்
4. ஏமுன் இவ்விருமையும் - இவ் [ உடன் படுமெய் ]
5. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவதியல்பே - வ்+அ= வ.

ஆ) குருகுமுண்டு – குருகும் + உண்டு

1. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவதியல்பே - ம் + உ= மு.

**29. பகுபத உறுப்பிலக்கணம்**

அ) அசைத்த – அசை+த்+த்+அ.

அசை – பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி

ஆ) செய்க – செய்+க

செய் – பகுதி, க – வியங்கோள் வினைமுற்று விகுதி.

**30. சொற்களைச் சேர்த்தும் இடம்விட்டும் எழுதும் வழிமுறைகள்**

1. வேற்றுமை உருபுகளைச் சேர்த்து எழுதுக

எ.கா → என்னுடைய வீடு

2. இடைச்சொல்லைப் பிரித்தலாகாது

எ.கா→ அவர்தாம்

3. எண்ணுப்பெயர்களைச் சேர்த்து எழுதுக

எ.கா→ ஐம்பத்தொன்று, இருபத்தொன்பது.

4. உடம்படுமெய் தோன்றும் இடங்களில் சேர்த்து எழுதுக.

எ.கா→ நாவையசைத்த, வரவில்லை

**III அ) எவையேனும் இரண்டனுக்கு விடைஎழுதுக.** **2 X 4 = 8**

| | | |
|---|---|---|
| 31. இடம் | : | அகநானூறு |
| ஆசிரியர் | : | மதுரை மள்ளனார் |
| திணை | : | முல்லை |
| துறை | : | வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகனிடம் சொல்லியது. |
| பொருள் | : | தேர்ப்பாகனே! நாம் கருதிவந்த செயல் இனிதே முடிந்தமையால் பெரிய தேரினை விரைவாக நம் ஊரை நோக்கிச் செலுத்துவாயாக! |
| விளக்கம் | : | கருமையான சிறகுகளைக் கொண்ட வௌவால் தான் |

பகலில் தங்கியிருந்த மரத்தைத் தனித்திருக்கவிட்டு இரை.தேடி மாலையில் சென்றுவிடும். வண்டுக்கூட்டம் தங்களை விட்டு பிரியாமல் மணமகளின் கூந்தலைப்போல கொடியில் முல்லை மலர்கள் மலர்ந்து மணம் வீசும். இவ்வாறான கார்காலத்தில் தலைவி தனக்காக வருந்திக் காத்திருக்கும் நிலையைப் பாணன் மூலம் அறிந்தான் தலைவன். உடனே தேர்ப்பாகனிடம் “குதிரைகளுக்கு மிகுந்த புல்லினை ஊட்டி பெருந்தேரினைத் தலைவியிருக்கும் ஊருக்கு விரைந்து செலுத்துவாயாக” என்று கூறினான்.

**32. சிக்கனத்தின் சிறப்புகள் :**

- ❖ பேரோடும் புகழோடும் வாழ்வதற்குப் பேரறிவே துணைபுரியும்; நாம் அனைவரும் சீரோடும் சிறப்போடும் வாழ சிக்கனமே வழிவகுக்கம்.
- ❖ ஆடம்பர வாழ்க்கை நீராவி போன்றது; சிக்கன வாழ்வு நீரூற்றைப்போன்று தொடர்ந்து பயனளிக்கும்.
- ❖ தாராள மனப்பான்மையால் பணத்தைத் தண்ணீர்போல் செலவு செய்தால் தீராத வறுமைக்கு விதையாகும்.
- ❖ வாழ்வில் ஒருவனுக்குச் சிறந்த சொத்து சிக்கனமே.
- ❖ சீரான முறையில், சிக்கனத்தைக் கடைபிடித்துப் பெரியார்போல் வாழ்ந்தால் பாராங்கல் மீதில் விழும் மழைநீர்ப்போல துன்பம் சிதறி அழிந்துவிடும்.

**33. முல்லைத்திணை:**

**முதற்பொருள்:**

நிலம் - காடும் காடு சார்ந்த இடமும்.

பொழுது : சிறுபொழுது – மாலை, பெரும்பொழுது – கார்காலம்.

**கருப்பொருள் :**

தெய்வம் : திருமால்

மக்கள் : ஆயர், ஆய்ச்சியர், இடையர், இடைச்சியர்.

பறவை : கானக்கோழி

விலங்கு : முயல், மான்

ஊர் : பாடி, சேரி.

நீர் : கான்யாறு

உணவு : வரகு, சாமை, முதிரை.

பறை : ஏறுகோட் பறை.

தொழில் : வரகுவிதைத்தல், களை பறித்தல், ஆநிரை மேய்த்தல், ஏறு தழுவுதல்.

உரிப்பொருள் :

இருத்தலும் இருத்தல் நிமித்தமும்.

சான்று : " பசைபடு பச்சை நெய் தோய்த்தன்ன" – அகநானூறு

பொருத்தம் : முல்லைத்திணை கருப்பொருள் : முல்லை மலர்.

பெரும்பொழுதாக – கார்காலம், சிறுபொழுதாக – மாலை கூறப்பட்டுள்ளதால் இப்பாடல் முல்லைத்திணை ஆயிற்று.

(அல்லது)

**பொருண்மொழிக்காஞ்சித் துறை :**

துறவியராகிய மெய்யுணர்ந்தோர் கண்ட பொருள் இதுவென அதன் இயல்பை உணர்த்துவது பொருண்மொழிக்காஞ்சித் துறையாகும்.

" எரிந்திலங்கு சடைமுடி முனிவர்
புரிந்து கண்ட பொருள் மொழிந்தன்று.

**<u>சான்று :</u>** பல்சான்றீரே பல்சான்றீரே – புறநானூற்றுப்பாடல்.

**<u>பொருத்தம் :</u>**

நல்லது செய்தல் இயலாவிடினும் தீயது செய்தலைக் கைவிடல் வேண்டும் என்ற மெய்ப்பொருளை உணர்த்தியமையால் இது பொருண்மொழிக்காஞ்சித்துறை ஆயிற்று.

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடையெழுதுக. 2 X 4 = 8**

34. பண்டைத் தமிழர்கள் பொருளீட்டுவதில் மேற்கொண்ட வரைமுறைகள் :

- ❖ ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு தொழில் செய்தே பொருள் தேடவேண்டும் என்னும் கொள்கை வேரூன்றியிருத்தல்.
- ❖ இரத்தல் மிகவும் இழிவானது.
- ❖ இரவாமலிருக்கும் நிலையைப் : பிறன்கடைச் செலாஅச்செல்வம்' என்று கூறி மகிழ்ந்தனர்.
- ❖ ஆக்களுக்கு நீர் வேண்டுமென்று இரப்பதும் இழிவானது.'
- ❖ தன் முயற்சியினால் வருகின்ற பொருளையே ஒருவன் செலவு செய்வதற்கு உரியவன் என்னும் மேன்மையான கொள்கையைக் கடைபிடித்தல்.
- ❖ " உள்ளது சிதைப்போர் உளரெனப் படார்" – குறுந்தொகை.
- ❖ பிறர் பொருளுக்கு விரும்புகிறவர்கள் அல்லர்.
- ❖ உறுப்பறைகள், பிணியாளர் முதலியோர் பிறரிடம் பொருள் எதிர்பார்ப்பது ஒருவாறு பொருந்தும்.

**35. நாடு என்னும் பற்றால் சமரசத்தை இழப்பது பற்றி திரு.வி.க உரைப்பன :**

- ❖ நாடு என்னும் பற்றால் பிற நாட்டிற்குத் துன்பம் இழைக்கிறான்.
- ❖ பிற நாட்டை வருத்துவதற்காக ஆகாய விமானங்கள், நீர் மூழ்கிகள், நச்சுக்காற்றுப் பிறவும் கண்டான்.
- ❖ ஒருவன் தன் நாட்டைத் தாய்போல் நேசிக்கலாம். ஆனால் அந்நேசத்தை மற்ற நாடுகளின் துன்பத்திற்குப் பயன்படுத்தலாகாது.
- ❖ இவர்கள் தங்கள் நாட்டையே கடவுளாகக் கருதுகிறார்கள். மற்ற நாட்டாரிடமும் கடவுள் இருத்தல் இவர்க்குப் புலனாவதில்லை.
- ❖ இவர்க்குத்தான் பசி உண்டு போலும் மற்றவர்க்கு இல்லை போலும்
- ❖ எல்லா நாட்டாரும் சகோதரர் என்பதை உணராமையால் பலர் நாடு என்னும் பற்றால் சமரசத்தை இழக்கிறார்.

**36. கற்களை அடுக்கி கட்டப்பட்டுள்ள கோவில்கள் :**

- ❖ கற்களை ஒன்றோடு ஒன்றாக அடுக்கி அமைக்கும் கோயில்பணி பல்லவர், பாண்டியர் காலந்தொட்டு நிலவி வருகிறது.
- ❖ பல்லவர் காலத்துச் சிறந்தவை :
  மாமல்லபுரம் கடற்கரைகோயில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில்
- ❖ பாண்டியர் காலம் :
  திருப்பத்தூர் திருத்தளிநாதர் கோயில்.
- ❖ சோழர்காலம் :
  நார்த்தாமலை விசயாலய சோழீச்சுரம்.
  தஞ்சை இராசராசேச்சுரம், திரிபுவன வீரேச்சுரம்.
  கங்கை கொண்ட சோழீச்சுரம்
  தாராசுரம் ஐராவதேசுவர் கோயில்

**இ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 X 4 = 12**

37. எடுத்துக்காட்டு உவமையணி

செய்யுளில் உவமை, உவமேயம் வெளிப்படையாகவும், உவமஉருபு மறைந்தும் வருவது எடுத்துக்காட்டு உவமையணி ஆகும்.

**சான்று :** இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை.

**பாடல் விளக்கம் :**

வறுமையுள் வறுமை விருந்தினரை உபசரிக்க முடியாமை, அதுபோல வலிமையுள் வலிமை அறிவிலாரின் தீமையைப் பொறுத்தல்.

பொருத்தம் :

உவமை : இன்மையுள் இன்மை விருந்தொரால்.

உவமேயம் : வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை

உவம உருபு : போல – மறைந்து வந்துள்ளது.

(அல்லது)

உருவக அணி :

உவமை, உவமேயம் வேறுபாடின்றி இரண்டையும் ஒன்றாகவே கூறுவது உருவக அணி.

**சான்று :** அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும் உள்ளழிக்க அரண்.

**பாடல் விளக்கம் :**

அறிவு அழிவு வராமல் காக்கும் கருவி பகைவரும் உட்புகுந்து அழிக்கமுடியாத அரணும் ஆகும்.

**பொருத்தம் :**

அறிவைக் காக்கும் கருவியாகவும், அரணாகவும் கூறியுள்ளதால் இது உருவக அணி.

பிறசான்றுகள் :

1. செழும்பொன் காய்ச்சி விட்ட ஓடைகள்
2. தூய மரகதக் கோட்டை காடே
3. தங்கத் திமிங்கலம் தாம்பல மிதக்கும் இருட்கடல்.

**38. தமிழாக்கம் தருக.**

அ. நாமொன்று நினைக்க கடவுள் ஒன்று நினைக்கும்.

ஆ. பருவத்தே பயிர் செய் / காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

இ. புல்லின்மேல் நடக்காதே.

ஈ. அன்பை விலைகொடுத்து வாங்க முடியாது.

**39. பாநயம் பாராட்டல்**

❖ **மையக்கருத்து :** செந்தமிழ்நாட்டின் சிறப்புகள் மற்றும் அதில் பாயும் நதிகளின் பெருமைகளைக் கூறுவது.

❖ **மோனை :** காவிரி – கண்டதோர், மேவிய – மேனி.

❖ **எதுகை :** செந்தமிழ் – தந்தையர், காவிரி – மேவிய

❖ **இயைபு :** போதினிலே – காதினிலே – பேச்சினிலே – மூச்சினிலே.

❖ **அணி :** இன்பத்தேன் - உருவக அணி.
செந்தமிழ்நாட்டின் சிறப்பு – உயர்வு நவிற்சி அணி.

❖ **சுவை :** பெருமிதச் சுவை

❖ **சந்தம் :** சிந்துவகை.

40. பொன்மாலைப்பொழுது (அல்லது) நட்பு என்னும் தலைப்பில் சொந்த நடையில் கவிதை எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக.

**IV பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக. 3 X 6 = 18**

**41. குழந்தைத் தொழிலாளர் அவலநிலை :**

❖ உணவு கிடைக்காமல் சோற்றுப் பருக்கைகளுக்குப் பின்னால் அலையும் இவர்களுக்குத் தட்டாம்பூச்சி பிடிக்க நேரமில்லை.

❖ வறுமையினால் கண்ணீர் வெள்ளத்திலிருந்து கரையேறத்துடிக்கும் இவர்களுக்கு மழைநீரில் காகித கப்பல் விட ஓய்வில்லை.

❖ வாழ்க்கையே இவர்களுடன் கண்ணாமூச்சி ஆடும்போது மற்ற குழந்தைகளோடு கண்ணாமூச்சி விளையாட நேரமில்லை.

❖ பசிக்கயிற்றில் பம்பரமாய் சுழன்று பணி செய்யும் இவர்களுக்குப் பம்பரம் சுற்றி விளையாட இயலவில்லை.

❖ இளம் வயதில் இவர்களிடமிருந்து விளையாட்டுகளைப் பறித்துக் கொண்டது யார்?

- பூக்களை ஏந்த வேண்டிய இவர்கள் வாழ்க்கையின் பாரத்தை ஏற்றி வதைகின்றனர்.
- எழுது குச்சிகளைப் பிடித்துக் கல்விகற்க வேண்டியவர் விரல்களில் தீக்குச்சிகள்.
- வேலைக்குச் செல்லும் இவர்கள் வாழ்வு இருளில் மூழ்கிட முதலாளிகளின் வெளிச்ச வாழ்விற்குத் தீக்குச்சிகளாய் எரிந்து சாம்பலாகின்றனர்.
- எதிர்காலத்தின் ஒளிவிளக்குகளாகத் திகழ்பவர் குழந்தைகளென கவரும் வார்த்தைகள் பேசுகிறவர்களே இவர்களின் நிகழ்கால வாழ்வே கரிந்து போய்விட்டதைக் காணுங்கள்.
- குழந்தைகள் தினத்தை மட்டும் கொண்டாடுவதைக் கைவிட்டுக் குழந்தைகளைக் கொண்டாட கற்றுக்கொள்ளுங்கள்.

(அல்லது)

**சிறியோரை இகழ்தலும் இலமே - தேம்பாவணி.**

- பிலித்தையர் படைத்தலைவன் கோலியாத்து இஸ்ராயேலரை எதிர்த்தான்.
- உங்களுள் ஒருவன் தனித்துப் போர் செய்ய வருக, வெற்றிப் பெற்றவர்க்குத் தோற்றவர் அடிமையாக வேண்டுமென அறைகூவினான்.
- கோலியாத்தை எதிர்த்து வெற்றி பெறுபவர்க்குத் தன் மகளை மணம் முடித்துத் தருவதாகச் சவுல் மன்னன் அறிக்கை விடுத்தான்.
- உடல்பலம் கொண்ட கோலியாத்தைக் கடவுளின் அருள் வலிமையால் சிறுவனாகிய நானே வெல்கிறேன் எனத் தாவீது சூளுரைத்தான்.
- சவுல் மன்னன் அளித்த படைக்கருவிகளை வாங்க மறுத்து ஐந்து கற்களோடு கவண் எடுத்துக் கோலியாத்தை எதிர்க்கப் புறப்பட்டான்.
- மதயானையிடம் நாய் போரிட வருமா? கோபம் கொண்டு வாய் திறந்து பெருமூச்சு விட்டால் புழுதிபோலப் பறந்து உலகுக்கு அப்பால் விழுவாய் என தாவீதைக் கோலியாத்து அச்சுறுத்தினான்.
- உன் வலிமை வெற்றி பெறுவதற்குரிய வேலாயுதத்தின் வலிமை. என் வலிமையோ தக்க சமயத்தில் உதவும், ஒப்புமையில்லா கடவுளின் வலிமை.
- கடவுளின் வலிமையைத் துணையாகக்கொண்டு விரைவில் உன்னை வீழ்த்தி உன் உடம்பைப் பறவைகளுக்கு உணவாகுமாறு செய்கிறேன் என தாவீதன் வீரமொழி கூறினான்.
- கல்லைக் கவணில் வைத்ததையும், கவனைச் சுழற்றியதையும் எவரும் காணவில்லை. விரைந்து செலுத்திய கல் கோலியாத்து நெற்றியில் பாய்ந்து வீழ்ந்ததை அனைவரும் கண்டார்.
- என் தெய்வம் உண்மையில் உள்ளதென்பதை அறிவாய் எனக்கூறி கோலியாத்தின் பெரிய தலையை இளந்தாவீதன் கொய்து போரில் வெற்றிகொண்டான்.

**42. கோ–கோவன் சொற்கள் குறித்துப் பாவாணர் கருத்துக்கள் :-**

- ஆவிற்குக் 'கோ' என்னும் பெயர் உண்டு.
- முல்லை நிலத்தார்க்கு ஆ என்னும் பெயரிலிருந்து ஆயர் என்னும் பெயர் ஏற்பட்டது.
- கோ என்னும் சொல் வடசொல் ஆகாது.
- கோ–பசு (பிங்கலம்) எருது (இலக்கண விளக்கம்)
- கோ + அன் = கோவன் = இடையன்
- கோவன் நிரை மீட்டான் (சீவகசிந்தாமணி)
- கோவன் – கோன் எனக்குறுதி **ஆன்** விகுதிபெற்று கோனான் என ஆகும். கோனார் – ஆயர்குடி பெயர்.
- கோவன் – கோன்– கோ = அரசன்
- குடிகள் – ஆக்கள், அரசன் – ஆயன், அரசன் = கோவன்
  ''கோவனும் மக்களும்'' – சீவகசிந்தாமணி
- அரசன் – மக்களைக் காத்தல். ஆயன் – ஆநிரையைக் காத்தல்; கோவன் – சிவன் (அகநானூறு)

(அல்லது)

**<u>நீதி கூறும்போது நயம்படக் கூறியவர் திருவள்ளுவர் : -</u>**

**<u>இரப்பவர் சொல்லாடப் போகும் உயிர் :</u>**

- ஒரு பொருளை ஈக என ஒருவன் இரத்தல் இழிவுடையது.
- அவசியம் ஏற்பட்டு யாசித்தே தீரவேண்டும் என்ற நிலையில் வந்து நிற்பவனின் நிலையைக் கண்ட பொருள் உள்ளவன் கூசாமல் 'இல்லை' என்கிறான்.
- இல்லை என்ற சொல்லை கேட்டவுடன் யாசித்தவன் உயிர் போய்விடுகிறது இல்லையென்ற நஞ்சோ சொல்கிறவன் வாய்வழி வந்தது. அது அவனை ஒன்றும் செய்யவில்லை.
- இல்லை என்றவன் உயிர் எந்தப் புரையிலாவது மறைந்திருக்க வேண்டும் என இரப்பவர்க்கு வேண்டியதைக் கொடுக்க வேண்டும் என்ற நீதி வரையறுக்கப்பட்டுள்ளது.

**பரந்து கெடுக உலகியற்றியான்**

- பிச்சையெடுத்து வாழ வேண்டும் என்னும் தொழிலைப் பலபேர்க்குப் பிரமன் தலையெழுத்தாக வகுத்தான் என்றால் அவன் ஒரு பாவி.
- அந்தப் பாவத்தால் பிரம்மனுக்கு பிச்சையெடுக்கும் பிறவி வாய்க்கட்டும்.
- போகிற இடத்தில் உடனே உணவைக், காசைப், பிச்சையைப் பெறாமல் பல வீடுகளில் பல தெருக்களில் அலையட்டும் என இரத்தல் கொடிது என்னும் நீதியை வள்ளுவர் வகுத்துள்ளார்.

**அரைபறை அன்னர் கயவர்**

- ❖ பறை அடிப்பவன் பறையை முழக்கிச் செய்தியைப் பலர் காதில் பல இடங்களில் சேர்ப்பதைப் போல் கீழ்மக்கள் இரகசியத்தைப் பலரிடம் பங்குபோட்டுக் கொடுத்துவிடுவர்.
- ❖ எனவே கீழ்மக்களிடம இரகசியம் கூறக்கூடாது என்னும் நீதி கூறப்பட்டுள்ளது.

**43. இ) பால்வண்ணம் பிள்ளை – நாடகம்.**

- ❖ ஆசிரியர் பெயர், கதைக்கரு எழுதியிருப்பின் 2 மதிப்பெண்கள்
- ❖ காட்சி, இடம், பங்குபெறும் கதைமாந்தர் பெயர் எழுதி நாடக வடிவில் எழுதியிருப்பின் 4 மதிப்பெண்கள் வழங்குக.
- ❖ பால்வண்ணம்பிள்ளை கதையைச் சுருக்கி எழுதியிருப்பின் 3 மதிப்பெண்கள் வழங்குக.

(அல்லது)

கிழிசல் – கருப்பொருளும் சுவையும் குன்றாமல் எழுதுக.

- ❖ ஆசிரியர் பெயர், கதைக்கரு, கதைமாந்தர் பெயர் எழுதியிருப்பின் 2 மதிப்பெண்கள் வழங்குக.
- ❖ கருப்பொருளும் சுவையும் குன்றாமல் எழுதியிருப்பின் 4 மதிப்பெண்கள் வழங்குக.

**V அடிமாறாமல் செய்யுள் வடிவில் விடை தருக. 6 X 1 = 6**

44. மனிதரெலாம் அன்பு நெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்
இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை
புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டில்
புத்தக சாலை வேண்டும் நாட்டில் யாண்டும்.

ஆசிரியர் : பாரதிதாசன்
பாவகை : எண்சீர் கழிநெடிலடி ஆசிரியர்விருத்தம்.

(அல்லது)

எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்.